**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.05.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**தமிழ்நாட்டில் 2024-ம் வருடத்திற்கான தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பு**

எதிர்வரக்கூடிய 2024-ம் ஆண்டின் தென்மேற்குப் பருவமழைக் காலத்திற்கான (ஜுன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை) மழை பற்றிய முன்னறிவிப்பு செய்வதற்காக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், பயிர் மேலாண்மை இயக்கத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்தியரேகையை ஒட்டியுள்ள கடற்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை மற்றும் தென் மண்டல காற்றழுத்த குறியீடு ஆகியவற்றை உபயோகித்து ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து பெறப்பட்ட மழை மனிதன் (Australian Rainman International V.4.3 Software) என்னும் கணிணி கட்டமைப்பைக் கொண்டு 2024-ம் ஆண்டிற்கான தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பு பெறப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் 60 சதவிகித வாய்ப்பிற்கான எதிர்பார்க்கப்படும் மழையளவு கீழே தரப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் **சராசரி மழையளவு** எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாட்டின் தென்மேற்கு பருவமழை முன்னறிவிப்பு - 2024

| வ. எண் | மாவட்டம் | சராசரி மழையளவு (மி.மீ) | எதிர்பார்க்கப்படும் மழையளவு (மி.மீ) | சதவிகித வேறுபாடு (%) |
|---|---|---|---|---|
| | **வடகிழக்கு வேளாண் காலநிலை மண்டலம்** | | | |
| 1 | சென்னை | 440 | 436 | -1 |
| 2 | செங்கல்பட்டு | 450 | 440 | -2 |
| 3 | கடலூர் | 360 | 376 | 4 |
| 4 | கள்ளக்குறிச்சி | 410 | 385 | -6 |
| 5 | காஞ்சிபுரம் | 479 | 462 | -4 |
| 6 | இராணிபேட்டை | 450 | 440 | -2 |
| 7 | திருவள்ளூர் | 456 | 421 | -8 |
| 8 | திருப்பத்தூர் | 416 | 406 | -2 |
| 9 | திருவண்ணாமலை | 449 | 438 | -3 |
| 10 | விழுப்புரம் | 405 | 385 | -5 |
| 11 | வேலூர் | 453 | 412 | -10 |
| | **மேற்கு வேளாண் காலநிலை மண்டலம்** | | | |
| 12 | கோயமுத்தூர் | 210 | 195 | -8 |
| 13 | ஈரோடு | 260 | 240 | -8 |
| 14 | திருப்பூர் | 151 | 139 | -9 |
| | **வடமேற்கு வேளாண் காலநிலை மண்டலம்** | | | |
| 15 | தர்மபுரி | 392 | 370 | -6 |
| 16 | கிருஷ்ணகிரி | 375 | 365 | -3 |
| 17 | நாமக்கல் | 336 | 331 | -2 |
| 18 | சேலம் | 421 | 419 | 0 |
| | **காவிரி வேளாண் காலநிலை மண்டலம்** | | | |
| 19 | அரியலூர் | 377 | 370 | -2 |
| 20 | கரூர் | 199 | 200 | 1 |
| 21 | மயிலாடுதுறை | 295 | 300 | 2 |
| 22 | நாகபட்டிணம் | 279 | 267 | -4 |
| 23 | பெரம்பலூர் | 279 | 269 | -4 |
| 24 | தஞ்சாவூர் | 314 | 298 | -5 |
| 25 | திருவாரூர் | 302 | 280 | -8 |
| 26 | திருச்சிராப்பள்ளி | 277 | 260 | -7 |
| | **தெற்கு வேளாண் காலநிலை மண்டலம** | | | |
| 27 | திண்டுக்கல் | 308 | 296 | -4 |
| 28 | மதுரை | 325 | 298 | -9 |
| 29 | புதுக்கோட்டை | 330 | 326 | -1 |
| 30 | இராமநாதபுரம் | 135 | 124 | -9 |
| 31 | சிவகங்கை | 417 | 421 | 1 |
| 32 | தேனி | 215 | 200 | -8 |
| 33 | தென்காசி | 175 | 180 | 3 |
| 34 | தூத்துக்குடி | 67 | 70 | 4 |
| 35 | திருநெல்வேலி | 128 | 140 | 9 |
| 36 | விருதுநகர் | 190 | 185 | -3 |
| | **மலைப்பிரேதேச மண்டலம்** | | | |
| 37 | நீலகிரி | 875 | 815 | -7 |
| | **அதிக மழை பெறும் மண்டலம்** | | | |
| 38 | கன்னியாகுமரி | 491 | 463 | -6 |




மக்கள் தொடர்பு அலுவலர்